கிதியோன்



பைபிள் கார்டு 38

கேள்விகள்

1. பாகாலின் பலிபீடத்தை கிதியோன் இடித்த பிறகு, அவருடைய அப்பா அவருக்கு என்ன பெயர் வைத்தார்? —நியாயாதிபதிகள் 6:32.

2. கிதியோன் சொன்னார்: “மனாசே கோத்திரத்திலேயே என்னுடைய குடும்பம்தான் ரொம்பச் _____ குடும்பம். என்னுடைய அப்பாவின் குடும்பத்திலேயே நான்தான் ரொம்ப _____.”—நியாயாதிபதிகள் 6:15.

3. சரியா, தவறா? இஸ்ரவேலர்களை ஆட்சி செய்ய கிதியோன் மறுத்தார்.—நியாயாதிபதிகள் 8:22, 23.


கி.மு. 4026 — ஆதாம் படைக்கப்பட்டது

வாழ்ந்தது சுமார் கி.மு. 1300-க்குப் பின்பு

கி.பி. 1

சுமார் கி.பி. 98 — கடைசி பைபிள் புத்தகம் எழுதப்பட்டது





கிதியோன்


இவரைப் பற்றி: இஸ்ரவேலர்களை அவர்களுடைய எதிரிகளிடமிருந்து காப்பாற்றிய தலைசிறந்த நியாயாதிபதிதான் கிதியோன். இவர் படுஜாக்கிரதையாகச் செயல்பட்டார், தைரியமாக யெகோவாவாமீது சார்ந்திருந்தார். கிதியோனுடைய படைவீரர்களின் எண்ணிக்கை எதிரிப் படைவீரர்களின் எண்ணிக்கையைவிட குறைவாக இருந்தாலும், அதாவது 1-க்கு 450 என்று இருந்தாலும், மீதியானியர்களையும் அமலேக்கியர்களையும் கிழக்கத்தியர்களையும் அவர்கள் தோற்கடித்தார்கள்.—நியாயாதிபதிகள் 6:33, 34; 8:28.

பதில்கள்

1. யெருபாகால்.

2. சாதாரண; அற்பமானவன்

3. சரி.



www.jw.org © 2017 Watch Tower Bible and Tract Society of Pennsylvania